Chundikuli Branch Library

Registered as a Newspaper　பக்கங்கள் 06　விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　மக்கள் தினசரி　Peoples Daily

நாதம் 04　திருவள்ளுவர் ஆண்டு 2024　புரட்டாதி 09　[25-09-1993]　சனிக்கிழமை　ஓசை 219

## யாழ். மாநகரசபை சோலைவரி பதில்மனு தாக்கல் செய்ய முயற்சி

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் யாழ். மாநகரசபையினால் அமுல் செய்யப்பட்ட புதிய சோலைவரியை நிறுத்திவைக்கும்படி விடுக்கப்பட்ட நீதி மன்ற தடை உத்தரவின் மனுவின் மீதான பதில மனுவினை தாக்கல் செய்யும் முயற்சியில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் ஈடுபட்டுள்ளார். கடந்த 15ஆம் திகதி உத்தியோகபூர்வ அலுவல்கள் காரணமாக கொழும்புக்கு புறப்பட்டுச் சென்ற யாழ் மாநகரசபை ஆணையாளர் மேற்படி மனுத்தாக்கல் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதற்கான நீதி மன்ற விசாரணைகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கொலரா நோயாளிகள் மேலும் 12 பேர் அனுமதி

[யாழ்ப்பாணம்]

வாந்திபேதி [கொலரா] நோய்க்கு இலக்கானவர்கள் எனசந்தேகிக்கப்படும் மேலும் 12பேர்நேற்று யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை இந்நோய்க்கிலக்கானவர்கள் என சந்தேகிக்கப்படுவோரை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தியுள்ளதாகவும் மருத்துவ அறிக்கை வந்த பின்னரே எத்தனைபேர் வாந்திபேதி[கொலரா]நோய்க்கிலக்காகியுள்ளார்களென்பது தெரிய வருமென மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளைகுருநகர்தொடர்மாடியில் இருவர் கொலரா நோய்க்கிலக்காகியுள்ளதாகசந்தேகிக்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதால் இந்நோய் பரவாமல் தடுப்பது தொடர்பான பல சுவரொட்டிகளை அப்பகுதியில் உள்ள சனசமூக நிலை

(05 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதப்படையின் பலத்தை அதிகரிக்க அரசு திட்டம்

## 12,000 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர்


(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்புப் படைக்கு பன்னீராயிரம் பேரை புதிதாகச் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக சிறிலங்கா வானொலி நேற்றிரவு அறிவித்தது. வடக்கு-கிழக்கில் சிறிலங்கா அரசு புதிதாக மேற்கொள்ளவுள்ள ராணுவ நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாகவும், இறந்த, காயமடைந்த, படையைவிட்டு ஓடிய படையினரின் தொகையினை ஈடுசெய்யும முகமாகவும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள புதிய திட்டங்களை தீட்டி வருவதாகவும் இந்நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான மாற்றங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுவருவதாகவும் சிறிலங்கா வானொலி மேலும் தெரிவித்தது.

இந்நடவடிக்கைகளுக்காக அரசபடைகள் பலப்படுத்தப்பட்டுவருவதாகவும் படைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் 12 ஆயிரம்பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டு தகுதி அடிப்படையில் படையினருக்கு பதவி உயர்வுகளும் சலுகைகளும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்தமாதம் இராணுவத்திற்கென சேர்த்துக் கொள்ளப்பட்ட 7500பேருக்கு வடக்கு-கிழக்கு முகாம்களில் பயிற்சி வழங்கப்பட்டுவருகின்றமை தெரிந்ததே.

மேலும் அங்கவீனமடைந்த படையிருக்கு உதவும்போரில் கொல்லப்பட்ட படையினரின் குடும்பங்களுக்கு உதவவும் மூன்று நலன்காப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் அவ்வானொலியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.



தியாகி லெப். கேணல் திலீபனின் நினைவாக தொடர் உண்ணாவிரதத்தை குருநகர் தொடர்மாடி மைதானத்தில் மேற்கொண்டுவரும் பொதுமக்களை படத்தில் காணலாம்.

# தியாகி திலீபன் நினைவாக பறவைக்காவடி, தேர் பவனி

### வீரச்சாவு



# கொழும்பு அகதிமுகாமில் 97 தமிழர்கள் கைது

கொழும்பில் தமிழர்கள் தங்கியிருந்த அகதிமுகாம் ஒன்றை இரவுவேளை திடீரெனச் சுற்றிவளைத்த பொலிசார் அங்கு தங்கியிருந்த 97 பேரைக் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

கொழும்பு சமூகசேவைகள் திணைக்களத்தால் நடாத்தப்படும் மேற்படி அகதி முகாம் கடந்த மூன்று வருடங்களாக இயங்கிவருவதாகவும் இதில் பலநூற்றுக்கணக்கான வடக்கு கிழக்கைச் சேர்ந்த அகதிகள்

மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் என மூன்றுபிரிவாக நிறுத்தி விட்டு 30வயதுக்குஉட்பட்டவர்களான 97 பேரைக் கைது செய்து றக்வண்டியில் ஏற்றி முகத்துவாரம் பொலிஸ் நிலையம் கொண்டு சென்ற

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை யொட்டி யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்வுகள் மிகவும் உணர்வெழுச்சியுடன் நடைபெற்று வருகின்றன.

இவ் அஞ்சலி நிகழ்வுகள் நாளுக்கு நாள் அதிகரித்த உணர்வுடனும் புதிய உத்வேகத்துடனும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த அஞ்சலி நிகழ்வுகளின் முக்கியஅம்சங்களாக விளங்கும் நீர்கூட அருந்தாது மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் அடையாள உண்ணா விரதத்தில் மேலும் பலர் நேற்று இறங்கியுள்ளனர். தியாகி திலீபன் உண்ணா விரதமிருந்து தியாக மரணமடைந்த நல்லூர் கந்த சுவாமி ஆலய வடக்கு வீதியில் நேற்று முதல் மேலும் எட்டுப் பேர் நீர்கூட அருந்தாது அடையாள உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அதேவேளை தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை தமிழீழ மெங்கும் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்

[5ஆம் பக்கம் பார்க்க]

# திலீபன் நினைவு கோட்டரீதியாக உண்ணாவிரதம், பொதுக்கூட்டம்

கடந்த 15ஆம் திகதியிலிருந்து இன்றுவரை வட்ட ரீதியாக நடைபெற்று வரும் தியாகி திலீபனின் 6-ம் ஆண்டு இறுதி நாள் அடையாள உண்ணாவிரதங்கள் நாளை கோட்டரீதியாக நடைபெற்று நினைவுப் பொதுக் கூட்டங்களும் நடைபெறவிருக்கின்றன.

வலிகாமம்/தீவக கோட்டம்/கடற்புலிகள் இணைந்த உண்ணாவிரதமும், பொதுக் கூட்டமும் நல்லூர்கந்தசுவாமி கோவில் முன்றலிலும், தென்மராட்சிக் கோட்டத்தில்நுணாவில்மணங்குணாப்பிள்ளையார் கோவில் முன்றலிலும், வடமராட்சிக் கோட்டத்தில் அல்வாய் மாலுசந்தி பிள்ளையார் கோவில் முன்றலிலும் நடைபெறவிருக்கின்றன.

கோட்டரீதியாக நடைபெறும் உண்ணாவிரதங்கள் காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகி, மாலை 4-00 மணிக்கு உண்ணாவிரதம் நிறைவு பெறும். இதனைத் தொடர்ந்து மாலை 5-00 மணிக்கு ஆரம்பமாகும் பொதுக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும், மக்களும் நினைவுரையாற்றுவார்கள். மேலும் லெப். கேணல் திலீபன் அவர்கள் தியாகச்சாவையடைந்த நேரமாகிய காலை 10-48 மணிக்கு உண்ணாவிரதிகளால் மலர் அஞ்சலிசெலுத்தப்படும். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளுடன், பட்டிமன்றம் நிகழ்வும் நடைபெறவிருக்கின்றன.

## நிவாரண வெட்டைக் கண்டித்து

# மடு ஐ. நா. அலுவலகம் பொது மக்களால் மூடப்பட்டது

சிறிலங்கா அரசு நிவாரணத்தை நிறுத்தியதை அடுத்து ஆத்திரமுற்ற மக்கள் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் உதவி அரச அதிபர் திறந்த அலுவலகம் மற்றும் மடு நிவாரண நிலையம் ஆகியவற்றை மூடிவிட்டதாக தெரியவந்துள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள செட்டிகுள மக்களுக்கு வழங்கி வந்த உலர்உணவு நிவாரணம் சிறிலங்கா அரசால் நிறுத்தப்பட்டதைக் கண்டித்து பெருந்திரளான மக்கள் கடந்த 23-ம் திகதி மடுவில் பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கிருந்த யு.என்.எச்.சி.ஆர் அலுவலகம் மடு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மற்றும் மடு திறந்த நிவாரண நிலையம் ஆகியவற்றை முற்றுகையிட்டதுடன் அவற்றைதற்காலிகமாகமூடியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.



லெப். நிரேஷ்

நேற்று முன் தினம் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளிஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் நிரேஷ் (குலவீரசிங்கம் தேவபாலன் மீசாலை தெற்கு, மீசாலை) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



வீரவேங்கை தமிழினியன் [ரமணி]

திருக்கோணமலை கங்காணிக்குளம்பகுதியூடாக கடந்த 21ஆம் திகதி இரவு 8 00 மணியளவில் சென்றுகொண்டிருந்த போராளி ஒருவர் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் அப் போராளி வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை ரமணி/தமிழினியன் (புருசோத்மன்பிள்ளை குமாரச்சந்திரன் -115, திருமால் வீதி, திருக்கோணமலை) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் முகத்துவாரம் கோவில்வீதியில் அமைந்துள்ள அகதி முகாமே இவ்வாறு சிறிலங்கா பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்டது.

இம் முகாமைச் சுற்றி வளைத்த பொலிசார் முகாமிலிருந்தவர்களை வெளியே வருமாறு அழைத்து 30 வயதிற்கு உட்பட்ட ஆண்கள், 30 வயதிற்கு கிழக்கைச் சேர்ந்த அகதிகள் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிலையம் கொண்டு சென்று தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கைதானவர்களின் உறவினர்கள் முகத்துவாரம் பொலிஸ் நிலையம் சென்று விசாரித்தபோது தமிழர்கள் தங்கியுள்ள இடங்கள், தமிழர் வசிக்கும் இடங்களை சோதனையிடுமாறு தமக்கு மேலிடம் உத்தர விட்டுள்ளதாக அவ் அதிகாரி தெரிவித்தாராம்.

இதேவேளை பாணந்துறை பகுதியில் தமிழ் வர்த்தகர்கள்

(5ஆம் பக்கம் பார்க்க]

# மட்டக்களப்பு நகரில் 12 பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து 12 பொதுமக்களைக்கைதுசெய்து முகாமுக்குக் கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் முரளி (புல்லுமலை), அரசமணி [மயிலம்பாவெளி], சந்திரன் (செங்கலடி) ஆகிய மூவரும் அடங்குவர். கைது செய்யப்பட்ட ஏனைய பொதுமக்களின் பெயர்விபரம் தெரியவரவில்லை.

# அதிரடிப்படையினர் மீது புலிகள் கிளைமோர் தாக்குதல்

(அம்பாறை)

அம்பாறை கஞ்சிக்குடியாறு காட்டுப்பகுதியில தேடுதல் நடத்திவிட்டுபின்வாங்கிய சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் கிளைமோர் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

கடந்த10-ம் திகதி மேற்படி

(5ஆம் பக்கம் பார்க்க)

# பதுங்கியிருந்து தாக்கியதில் 2 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு கெம்பிமடு என்னும்இடத்தால் கடந்த 22 ஆம் திகதி காலை சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகள் போராளிகள் மீது அப் பகுதியில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். இதனால் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கவுண்டான் [பொன்னையா தர்மலிங்கம்கரப்பளை சவளப்பிட்டி, மன்னம்பிட்டி] வீரவேங்கை ஜனகன் [கண்ணமுத்து வாமதேவன் நடுக்குடியிருப்பு பனிச்சங்கேணி] ஆகிய இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## விடுமுறை தினம்

தியாகி லெப். கேணல் திலீபனின் நினைவு தினத்தை யொட்டி நாளை தமிழ்த் தேசிய தினமாக பிரகடனப் படுத்தப்பட்டு, எழுச்சிநாளாக அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது. அன்றைய தினம் மருந்து விற்பனை நிலையங்கள், தேநீர்க் கடைகள், ரயர் ஒட்டும் நிலையங்கள் போன்ற அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனையவை யாவும் மூடப்பட்டிருக்கும்.

## உள்ளே

தியாகி லெப், கேணல் திலீபனின் உருவப் படம் இணைக்கப்பட்டுள்ளது.


"என்னுயிரினும் மேலான தமிழீழ மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெழ வேண்டும். இங்கு ஒரு மாபெரும மக்கள் புரட்சி வெடிக்கட்டும்."

- திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்

(சி-7435)

## வரி விளம்பரம்


**மிருதங்கம்**

இரண்டு நாட்களுக்குள் மிருதங்கம் சுத்தமாக சாதம் போட்டுக் கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோயிலடி யாழ்ப்பாணம். (6088)

**விற்பனைக்குண்டு**

இங்கிலண்ட் பெற்றர் எஞ்சின் குதிரை இழுவை 3 RPM 2800 மின் சக்தி இழுவை 2 நேரில் தொடர்பு கொள்ளவும் S.S.R. அரிசி ஆலை டச்சு வீதி 1-ம் கட்டை, சாவகச்சேரி (6084)

**தேவை**

ஆங்கில வைத்திய நிலையத்திற்கு பெண் தாதிமாரும், பெண் உதவியாளரும் தேவை. வேலை பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். பே/பா 800 C/O ஈழநாதம். (6062)

**பாலர் ஆசிரியராக...**

பாலர் ஆசிரியராக பயிற்சி பெற குறைந்த தகைமை க.பொ.த(சா/த) சித்தவர்முடியாதோர் தபாலிலும் கற்கலாம் பாலர் ஆசிரியர் சங்கம்' உயர் கலைக்கல்லூரி-73 பருத்தித்துறை வீதி-ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். (5955)

**போத்தல் தேவை**

ஹோர்லிக்ஸ், வீனா போத்தல்கள் மூடியுடன்: ஜாம், சோஸ், பியர் மற்றும் கோடியல் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும், விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ரேஸ்லைன் இண்டஸ்ரீஸ் (தனி) லிமி. 14 சினியர் ஒழுங்கை யாழ்ப்பாணம் (சி-7400)


## 3-ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



**வீரவேங்கை தவக்குமார்**

[சிவசுப்பிரமணியம் ஜனார்தனன்]

தாயக மண்ணில் 25-08-1973 தமிழீழ மண்ணில் 25-09-1990

இளமைததும்பும் வேளையிலே
இதயம் பூக்கும் நேரத்திலே
பேரினவாதக் கொடுமையினால்
போரினை மேற்கொண்டிருந்தாய்
தாயினும் மேலாந் தமிழன்னை
தனித்து நிற்கப் போனாயே
தாய் தந்தை சுற்றம் கலங்கி நிற்கத்
தமிழர் நும்பணி தொடர்கின்றனரே.


இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களான கோபிநாத். பரதன் ஆகியோரையும் இந்த வில் நாம் நினைவு கூருகின்றோம் இன்று இவரது இல்லத்திற்கு வருகை தரும்படி சகபோராளிகள் உற்றார், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்களைப்பிரிந்து துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா,
உறவினர், நண்பர்கள்

ஜனார்த்தனன் வீதி
ஏழாலை கிழக்கு
ஏழாலை

(6092)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 02-07-1972

வீரச்சாவு 26-08-1993

**லெப். பூபாலன்**

(சுந்தரராசா பாஸ்கர)

தீதீ: 25. 09. 1993

கிளாலியின் கடலலைகள்
கரையை முத்தமிடும் போதெல்லாம்
மாவீரரே! உமது பெயர்
எம் செவிகளில் ஒலிக்கும் - நீர்
தோள்களில் சுமந்த பணியை
சிந்தையில் இருத்துகிறோம்.
சிறப்பான விடியலைக் காண...

இன்று [25-9-93] எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அழைக்கின்றோம்.

நாகர்கோவில் வடக்கு
தாளையடி.

அன்பு அப்பா,
அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், உற்றார்,
உறவினர்கள்.

[6093]

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும், கொத்தணிகளினதும் அங்கத்தவர்களுக்கும் பணியாளர்களுக்குமான

## அறிவித்தல்

தியாகச் செம்மல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவையொட்டி நடைபெறவுள்ள இறுதி நாள் (26-09-93) உண்ணா நோன்பில் முழுமையாகப் பங்கு கொண்டு மகத்துவம் மிக்க இந்நோன்பை சிறப்பாக அனுஷ்டிக்கும் வண்ணம் இத்துறைசார்ந்த அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்றைய தினம் இறைகளின் வியாபார நடவடிக்கைகளை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளவும், உற்பத்திப் பொருள் கொள்வனவு மட்டும் அனுமதிக்கப்படுகின்றது.

தலைவர்
வடமாகாண தெ.ப.பொ.கூ.ச.சமாசம்.

[சி-7486]

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-09-25

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை- 10-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 08 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டு-பட்டிருப்பு எல்லைக்கிராமத்தில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட பெண்கள் உட்பட மூன்று விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த 08 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு கோடாலிக்கல் பகுதியில் இந்தியப்படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய-

**ஜஸ்ரின்** (ஆறுமுகம் புலேந்திரன் - 2-ம்வட்டாரம். முள்ளியவளை - முல்லைத்தீவு)

இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

**காண்டீபன்** ( - - - )

தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

யாழ் - பண்டத்தரிப்புப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 பொதுமக்கள்.

1990ஆம் ஆண்டு வவுனியா - பாவற்குளம், 1-ம் படிவம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**கோபிநாத்** (வேலாயுதம் ரவி - வாயிக்குட்டியூர், பாவற்குளம் - வவுனியா)

**பரதன்/வரதன்** [கந்தசாமி உதயசங்கர் - சேமமடுக்குளம், சேமமடு - வவுனியா]

**தவக்குமார்** (சிவசுப்பிரமணியம் ஜனார்த்தனன் -ஏழாலை கிழக்கு - யாழ்)

அம்பாறை - அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோயில் பகுதிகளில் சிறிலங்கா ராணுவத்தால் கைது செய்யப்பட்டு பின்னர் தலைகள் துண்டிக்கப்பட்டு சாக்கில் கட்டப்பட்ட நிலையில் தமிழீழக் கடற்பரப்பில் 40-ம்கட்டையில் கிடந்த 10 தமிழர்கள்.

மட்டுநகரில் தேசவிரோதசக்திகளினால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போன தச்சுத் தொழிலாளியான நாவற்குடா, ஒட்டுக்கரையைச் சேர்ந்த இளைஞன், நொச்சிமுனை மாதர் வீதி வாசி ஆகிய 02 தமிழர்கள். சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட

# அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைந்த விவசாயத் திட்டம் 1993/94

யாழ்குடாநாட்டில் விவசாயத் திட்டங்களில் உதவி வழங்கும் நோக்கில் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தின்கருத்துக்களுக்கமைவாக கீழே குறிப்பிடப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச அதிபர், திணைக்கள அதிகாரிகளின உதவியுடனும், தனித்தும் விவசாய உள்ளீடுகளைத் தருவித்துள்ளனர்.

## பங்குபற்றும் நிறுவனங்கள்

'ஊற்று' நிறுவனம்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
உலர்வலய அபிவிருத்தி மன்றம்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

மக்கள் நலன்காக்கும் பிரிவு
அறவழி போராட்டக்குழு,
சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ.இ)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ... பாதுகாப்பு நிதியம் (ஐ.இ)

## யாழ் குடாநாட்டின் ஒருங்கிணைந்த விவசாயத் திட்டத்தின் முக்கிய கட்டங்கள்

★ காலபோக நெற்செய்கை

★ காலபோக சிறுதானியம், மரக்கறி, கிழங்குவகை செய்கை.

★ சிறுபோக மரக்கறி, கிழங்குவகை, சிறுதானியங்கள் செய்கை.

மேற்படி திட்டங்களில் 10,000 விவசாயிகள் மட்டுமே பயன்பெற உள்ளனர்.

## இத்திட்டங்களில் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையா? அல்லது மேலதிக உற்பத்தியில் ஈடுபட ஆர்வம் கொண்டுள்ளீர்களா?

குறைந்த எரிபொருளில் அல்லது எரிபொருள் இல்லாமல் பயிர் செய்யவும், உங்கள் குடும்பத்துக்கு வருமானம் பெறவும், உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்கவும் மேலுமோர் திட்டம்.

★ காலபோக மானாவாரி சிறுதானியச் செய்கை

ஃ எதிர்வரும் 'பருவ மழை' க்காலத்தில் மானாவாரியாக சிறுதானியங்கள் உற்பத்திசெய்யக்கூடிய வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, அரியாலை விவசாயிகள் நம்பிக்கையுடன் உற்பத்தியில் பங்குபற்றுங்கள்.

ஃ அரசசார்பற்ற நிறுவனங்கள் கடனடிப்படையில் அல்லது குறைந்த விலையில் விதை தானியங்களையும். உரம் என்பவற்றையும் வழங்கத் தயாராக உள்ளன.

ஃ இயற்கை 90 வீதமான நீர்ப்பாசன வசதிகளை செய்துதரத் தயாராக உள்ளது.

ஃ இயற்கை வழங்கும் நீர்ப்பாசன வசதிகளுக்கு மேலாக நீர்ப்பாசன வசதிகள் தேவைப்படும்கட்டத்தில் மண்ணெண்ணெய் விநியோகிக்க அரசாங்க அதிபர் சம்மதம் வழங்கியுள்ளார்.

ஃ மாவட்ட விவசாயக்குழு, உற்பத்தியாகும் தானியங்களை நியாய விலையில் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

ஃ சமூகம் உங்களை சாதனையாளராக கௌரவிக்கும்.

மேலும் காலத்தைத் தாமதமாக்காதீர்கள். குறிப்பிட்ட பயனாளிகளூடே உதவிகள் பெற வாய்ப்புள்ளமையால் தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு பச்சிலைப்பள்ளிப் பகுதியில் மானாவாரியாக சோளம், நிலக்கடலை, எள், பயறு, உழுந்து பயிரிட விரும்பும் விவசாயிகள் உங்கள் கிராமசேவகர்களூடாக பிரதேச செயலருக்கு செய்கை பண்ணும் பரப்பளவு, பயிர், தேவைப்படும் உள்ளீடுகள் விபரத்தை வழங்குங்கள்.

மேலதிக தகவல்களுக்கு திட்டத்தைச் செயல்படுத்தவுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

அறவழிப் போராட்டக்குழு — தென்மராட்சி

'ஊற்று' நிறுவனம் — தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் — வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி,

மக்கள் நலன்காக்கும் பிரிவு — அரியாலை

விவசாய ஒருங்கிணைப்புக் குழு,
அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
100, இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம்.

(சி-7485)

---

சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த இளைஞன், செங்கலடியைச் சேர்ந்த மாணவன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றுச்சமரில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுவரும் போது வீரச்சாவெய்திய-

**சீலன்/குணசீலன்** (இராசு சிறிக்குமார் - கனகராயன் குளம் - வவுனியா)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சின்னமருது** [தேவராசா சிவகுமார் - போகபுரம், உரும்பராய் கிழக்கு - யாழ்]

திருமலை - முதலிக்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படைத்தளத்தில் விமானப்படையினர் மீது பதுங்கியிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**மேஜர் ஜீவா / அன்சார்** (சின்னத்தம்பி தியாகராசா - கந்தளாய் திருமலை)

மட்டு - களுவாஞ்சிக்குடிக்கும், களுதாவளைக்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட, தமிழிளைஞன்.

1992ஆம் ஆண்டு மட்டு - இடைக்காடுப் பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொண்ட போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**இந்துஜன் / ரேமியோ** (தவராசா உதயகுமார் - சிறிய புல்லுமலை - மட்டு)

மன்னார் மாவட்டம் பூநகரியிலுள்ள பள்ளிக்குடா என்னுமிடத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ மினிமுகாம்களையும், 62 தொடர் காவலரண்களையும் தாக்கியழித்த போது வீரச்சாவெய்திய,

**2ம்லெப். சுருளி** (நவரட்ணம் ரவி மூதூர் - திருமலை)

மன்னார் மாவட்டத் தளபதி

**லெப். கேணல் சுபன்** (விநாசித்தம்பி சுந்தரலிங்கம் - இலுப்பைக்கடவை - மன்னார்)

**லெப். அறிவுடையான்** (செல்லையா உதயகுமார் - பூநகரி - மன்னார்)

**2-ம் லெப். பன்னீர்ச்செல்வன்** [சந்தியாப்பிள்ளை அல்போன்ஸ் டானியல் - தலைமன்னார்)

**நெடியரசன்** (இராமப்பிள்ளை மகாலிங்கம் - ஞானிமடம் பூநகரி - மன்னார்)

**லெப் இயல்வாணன் / சமன்** (முருகேசு வரதராஜன் - தென்னியங்குளம் - துணுக்காய்)

**லெப். தமிழேஸ்வரன்** (கார்த்திகேசு யோகேஸ்வரன் - கரவெட்டி - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7483]

உ

ஸ்ரீராமஜெயம்




வண்ணை - ஸ்ரீவெங்கடேச
வரதராஜப் பெருமாள்
தேவஸ்தானம்
யாழ்ப்பாணம்.

ரதோற்சவம் (தேர்)

இன்று 25-09-1993 ( 2-ஆம் புரட்டாதி சனி )

வசந்தமண்டப பூஜை காலை 9.00 மணி
தேர் ஆரோகணம் முற்பகல் 10.45 மணி
தீர்த்தம்
நாளை ஞாயிறு 26-09-1993 காலை 10.00மணி
வசந்தமண்டப பூஜை காலை 9.00 மணி

அடியார்கள் அனைவரும் எம் பெருமானின் திவ்விய விழாவினைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்று திருமகள் விலாச சம்பன்னராய் வாழ வேண்டுகிறோம்.

தேவஸ்தான ஆதீன மகாசபை.

(சி-7487)


# செஞ்சிலுவை வாகனத்தில் சென்ற ஊனமுற்றோர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் வவுனியாவிலிருந்து கண்டிக்கு சென்ற ஊனமுற்றவர்கள் இருவர் மாத்தளையில்வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாண்டிக்குளம்காவலரணில் அண்மையில் நடைபெற்ற மோதலின் இடையே அகப்பட்டுக் கையை இழந்த செலஸ்ரீன் சபரியப்பு [39] என்பவரும், மிதிவெடியில் அகப்பட்டு கால் ஒன்றை இழந்த பாலசிங்கம் என்பவரும், செயற்கை உறுப்புக்கள் பொருத்திக் கொள்வதற்காக வவுனியாவிலிருந்து கண்டிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் சென்ற போதே மாத்தளையில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் கைது செய்யப்பட்டவராயினும் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் வவுனியா செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் உண்மை நிலையை எடுத்துக் கூறியபோதும் உடல் ஊனமுற்ற இவ் இருவரும் தொடர்ந்து பயணம் செய்வதற்கு பொலிசார் அனுமதிக்கவில்லை


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
4. 10. 1973
வீரச்சாவு
25. 09. 1992

### லெப். தமிழேஸ்வரன்
(கார்த்திகேசு யோகேஸ்வரன்)

தங்கம் நிகர்த்த தம்பி தமிழேஸ்வரா
பொங்கி எழுந்து பூநகரி மண்ணிலே நீ
செங்குருதி சிந்தியே செந்தமிழ் பயிர் வளர்த்தாய்
சிங்கக்குருளை சிந்தைக்கினியவே
மங்காப்புகழ் படைத்த மாவீரா
எங்கெங்கும் தேடினோம் எழில்முகம் காணவில்லை
வெங்கனலாய் வேகுதடா எம் இதயக் கண்ணீரை
பங்கயப் பாதத்திற்கு காணிக்கை ஆக்குகின்றோம்.

குறிப்பு:- இன்று எமது இல்லத்தில் நடைபெறும் 1-ம் ஆண்டு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தல்லையப்புலம்.
கரவெட்டி.

பெரிய தாயார்,
சிவஞானசுந்தரம்,
மீனாட்சி குடும்பத்தினர்.

(3450)


### கண்டெடுப்பு

ஊரிகாவற்றுறையைச் சேர்ந்தநடராஜா ஐயத்திரா என்பவரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளவும்.


### எழுச்சி யாத்திரையும் வீதி நாடகமும்

( பருத்தித்துறை )

போர்க்காலச் சூழ்நிலைகளைத் தெரிவிக்கு முகமாக வடமராட்சி விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுப் பிரிவு போர்க்கால எழுச்சி யாத்திரையையும் ''நிகழ்வுகள்'' வீதி நாடகத்தையும் வடமராட்சிப் பகுதியில் உள்ள கிராமங்களில் நடாத்தி வருகின்றது. அச்சுவேலி, கரவெட்டி, மந்திகைப் பகுதிகளில் நடாத்தப்பட்ட இப் போர்க் கால எழுச்சியாத்திரைக்கும் 'நிகழ்வுகள்' வீதி நாடகத்திற்கும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். (25)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திதி : 25 - 09 - 1993





## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
04 – 06 – 1969



தாயக மண்ணில்
06 – 10 – 1992

01-10-1992 அன்று கட்டைக்காடு மினிமுகாம் மீதான வரலாற்றுச் சாதனையில் விழுப்புண் ஏற்று 06-10-92 அன்று வீரச்சாவடைந்த

யாழ் மாவட்ட விசேட வேவுப்படைப் பொறுப்பாளர்

வேவுப்புலி

# மேஜர் கார்வண்ணன் (பீற்றர்)

## (சிவஞானசுந்தரம் சிவசோதி)

கொட்டு முரசொலியும் கோலக் குயில் மொழியும்
விட்டுப் பிரிந்ததுவோ மேதினியில் கார்வண்ணா
சிங்களப் படைகளுடன் செங்களமாடியே
நீ மறைந்தாய் கார்வண்ணா
தொட்டுணரவியலாத திருச்சுடரானாயோ

(6091)

தாயின் மடியில்
08 – 12 – 1970



அன்னிய அழிப்பில்
03 – 02 – 1989

08-02-1989 அன்று மிருசுவிலில் இந்திய இராணுவத்தின் கண்மூடித்தனமான சித்திரவதைக்குள்ளாகி சுட்டுக் கொல்லப்பட்ட

# சிவறஞ்சன் (றஞ்சன்)

## (சிவஞானசுந்தரம் சிவறஞ்சன்)

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
உன் நினைவுகள் எம் மனதை விட்டு அகலவில்லையடா
றஞ்சா
எப்போது உன் இனிய முகம் காண்போமடா

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

# ஓங்குபுகழ் வீரனுக்கு ஓராண்டு நினைவஞ்சலி

## மன்னார் மாவட்ட முன்னாள் விசேட தளபதி

# லெப். கேணல் சுபன்

(வினாசித்தம்பி சுந்தரலிங்கம்)



**மலர்வு:**

21. 07. 1965

**வீரச்சாவு:**

25. 09. 1992



திதி:
14. 10. 1993

பூநகரிப் பாதையினுள்
புகுந்த, 'எதிரிமுகாம்
நானழித்து அவ்வழியே-யாழ்
நகர் வருவேன்' என்ற 'சுபன்'..!

தாயென்றுருகும் மன்னார்-நீ
தவழ்ந்த ஊர் கள்ளியடி...
நாளும் உன் நினைவாலே
நனைந்த மன விழிகள்...!

தளபதி சுபனோடு சாவிலும் இணைந்து – தமிழீழமண்ணில் விதையென வீழ்ந்த மாவீரர் யாவர்க்கும் எமது அஞ்சலிகள்

14. 10. 93 வியாழக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி வைபவத்தில் அனைவரையும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கள்ளியடி
இலுப்பைக்கடவை

தாய், தந்தை, சகோதரர்

[5532]

சிந்தனைக்கு

ஆசைகளை திருப்தி செய்வதில் அல்ல மட்டுப்படுத்துவதில் தான் அமைதி உள்ளது.

-ரெஜினால்ட் ஹிபெர்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-09-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028

த. பெ. எண்-05


## சிறிமாவோவின் ஆசை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ன? சிங்கள அரசியத் தலைவர்களிடம் இது குறித்து எப்பொழுதுமே தெளிவான கொள்கை இருந்ததில்லை. இன்று இனப்பிரச்சினைக்கு நேர்மையான அரசியத் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் எனக் கோரும் அரசியத் தலைவர்கள் நாளை, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே வழி எனப் பேசுவதும், இனப்பிரச்சினை ஒன்று இருந்தால் தானே பிரச்சினை தீர்வு பற்றிப் பேசுவது எனத் தெரிவிப்பதும் வழமையாகி விட்டதொன்று.

இந்த விடயத்தில், சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவில் இருந்து எதிர்க்கட்சி தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கா வரை ஒரே ரகத்தைச் சார்ந்தவர்களே. இவர்கள் எவரிடமும் இனப்பிரச்சினைக்குத் தெளிவான தீர்வுத் திட்டம் எதுவுமில்லை. ஆனால், தம்மால் தான் அதைத் தீர்த்து வைக்க முடியும் என அவர்கள் பேசிக்கொள்வதுண்டு.

இந்த வகையில், சிறிமாவோ பண்டாரநாயக்காவும் இனப்பிரச்சினையை தீர்க்க தனக்கொரு சந்தர்ப்பம் வழங்குமாறு சிங்கள மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். ''விடுதலைப்புலிகள் விரும்புவதைப் போல ஓர் அங்குல நிலத்தைக் கூடக் கொடுப்பதற்கு நான் தயாராக இல்லை. எனினும் இராணுவ நடவடிக்கை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்று ஏற்படுத்த முடியாது. எனக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டால், இனப்பிரச்சினையை அமைதானமாகத் தீர்த்து வைப்பேன்'' என்பதே சிறிமாவோவின் கோரிக்கை ஆகும்.

ஆயுதப் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்துள்ள நிலையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க ஒரு சந்தர்ப்பம் வழங்குமாறு சிறிமாவோ பண்டார நாயக்கா கோருவதில் சிறு நியாயம் இருக்கத்தான் செய்கின்றது. இருப்பினும், அவருக்கு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பம் இதுவரை எப்பொழுதுமே இடைக்கவில்லை என்று கூறிவிட முடியாது. அவரது ஆட்சிக் காலமான 1970 - 1977 மதிதி வரையிலான காலப் பகுதியிலேயே ஆயுதப் போராட்டம் அரும்பத் தொடங்கியது. ஆனால், அதற்குரிய நியாயமான தீர்வை அவர் காண ...

# தமிழர்கள் கொழும்பு செல்ல அச்சமடையும் நிலைதோன்றியுள்ளது

## மட்டக்களப்பு பிரஜைகள் கவலை

(கொழும்பு)

கொழும்பு செல்வதற்கு அச்சப்பட வேண்டிய நிலை உருவாகி இருப்பதாக மட்டக்களப்பு பிரஜைகள் சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

காரணமின்றிக் கைது செய்யப்படுவதும், நீண்ட நாட்களுக்கு தடுத்து வைக்கும் செயல்களும், தொடர்ந்தும் இடம் பெற்று வருவதால் மட்டக்களப்பிலிருந்து தமது பல்வேறு கருமங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக கொழும்பு செல்பவர்கள் அச்சத்துடனேயே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் உள்ளூர் பாதுகாப்பு அதிகாரிகளால் உறுதி செய்யப்பட்ட புகைப்படங்களையும் கொழும்பில் சோதனை யிடுவோர் கவனத்திற்கு எடுப்பதில்லை எனவும், தேசிய புலனாய்வு பணியகத்தின் அறிக்கை கிடைக்கும்வரை தடுத்து வைக்கப்படுவதால் பலர் தமது வெளிநாட்டுப் பயண வாய்ப்புகளை இழந்திருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## இராணுவ கோப்ரல் தற்கொலை மின்னேரிய முகாமில் சம்பவம்

(கொழும்பு)

காவல் அறையை உடைத்து இராணுவ கோப்ரல் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். மின்னேரியா இராணுவ பயிற்சிப்பாடசாலைச் சேர்ந்த இராணுவ கோப்ரல் வை எம். ச. குணசேகர (20 வயது) தம்மைத் தாமே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இவர் பயிற்சிப் பாடசாலைக் களஞ்சியத்திலிருந்த துப்பாக்கியை காவல் அறையை உடைத்தெடுத்து தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

## மோட்டார் வாகனம் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

நீர் கொழும்பில் பொலிஸ் தடையை மீறிச் சென்ற மோட்டார் வாகனம் பொலிசாரினால் சுடப்பட்டது. துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான அந்த வாகனம் சுமார் ஆறு மைல் தூரம் ஓட்டிச் செல்லப்பட்ட பின்னர் பொலிசாரினால் தடுத்து நிறுத்தப்பட்டது. மோட்டார் வாகனத்தில் இருந்த மூன்றுபேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

சில தினங்களுக்கு முன்னர் நீர் கொழும்பு தேநதலைப் பொல எனற இடத்தில் இச் சம்பவம் நிகழ்ந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மலேசிய தமிழ்ப் பிரஜை எனச் சொல்லப்பட்டது. மற்றைய இருவரும் நீர் கொழும்பைச் சேர்ந்தவர்கள்.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் பொலிசாரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## ஜனதாக் கட்சி இணைப்பு மூன்றாம் அணி வளரும்

### முன்னாள் பிரதமர் சந்திரசேகர்

ஜனதா கட்சிகள் அனைத்தும் தமக்கிடையேயான பிளவுகளைத் துறந்து ஒன்றுபடுமேயானால் அது காங்கிரஸ் கட்சிக்கும், பாரதீய ஜனதாக் கட்சிக்கும் மாற்றான மூன்றாவது சக்தியாக உருவெடுக்கும் என்று முன்னாள் பிரதமரும் சமாஜவாதி ஜனதாக் கட்சியின் தலைவரான எஸ்.சந்திரசேகர் தெரிவித்தார்.

சூரஜ்கில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில் பல்நாட்டு நிறுவனங்களின் வரவைத் தாம் வரவேற்கவில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இணைப்பை தான் விரும்பவில்லை என்றும், எனினும், காங்கிரஸ் மற்றும் பாரதீய ஜனதாக் கட்சியையும் எதிர்ப்பதற்கு பொது மேடை அமைக்கலாம் என்று 'லோக்தள்' கட்சியின் தலைவர் ராம் பிரேஷ் சிங் தெரிவித்தார்.

## நீதிமன்றுக்கு வராதவருக்கு அபராதம் கட்ட பணிப்பு

(தென்மராட்சி)

நீதி மன்றத்துக்கு வராதவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரியில் தமிழீழ நீதிமன்றினால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது ...

சண்டையிட்டமைக்காக நீதி மன்ற விசாரணைக்கு அழைக்கப்பட்ட இவர் அதனை ஏற்று சமூகமளிக்கத் தொடர்ந்தும் தவறியமையால் நீதியாளர்கள் 500ரூபா அபராதம் விதி...

### திருட்டு

(தென்மராட்சி)

கள்ளுத்தவறணையில் விடப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டியொன்று திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரி காவல்துறை பணிமனையில் புகார் செய்யப்பட்டுள்ளது. (86)

★

(தென்மராட்சி)

வீட்டின் முன்பாக இரவு வேளையில் நிறுத்தப்பட்டிருந்த யமஹா ரக மோட்டார் சைக்கிளொன்று திருட்டுப் போயுள்ளது.

சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த இராமநாதன் தம்பையா என்பவரே தனது மோட்டார் சைக்கிளை வீட்டின் முன்விறாந்தையில் இரவில் நிறுத்தி வைத்ததாகவும் காலையில் அது திருடப்பட்டிருப்பதைக் கண்டதாகவும் சாவகச்சேரிகாவல் துறைப் பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளார். (86)

### விவசாயிகளுக்கு உதவி

[தொல்புரம்]

குடாநாட்டு பயிர்செய்கையாளர்களுக்கு யாழ் மாவட்ட சமாதான சேவை நிலையத்தினால் குறைந்த விலையில் விவசாய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

நீர் இறைக்கும் இயந்திரங்கள், வாளிகள், தெளிகருவிகள் போன்ற விவசாய உபகரணங்கள் அண்மையில் கப்பலில் எடுத்து வரப்பட்டதை அடுத்து இவை குறை...

## நாவரண்ட நாதமணி

பல்லவி

நல்லைநகர் வீதியிலே...நாயகனே! நீகிடந்தாய்\
நாவரண்டு நாவரண்டு நாதமணி! பேச்சிழந்தாய்\
நீகிடந்த பாயருகில் நாமிருந்து கண்சொரிந்தோம்\
நேருவழிப் பேரனுக்கு நெஞ்சுருகும் என்றிருந்தோம்.

அனுபல்லவி

நெஞ்சுருக வில்லையடா நீபிழைக்க வில்லையடா\
நீலமுகில் கீழிறங்கி நீர்சொரிந்து போனதடா.

சரணம்

அன்றுஅதிகாலையிலே ..வந்தமர்ந்தாய் மேடையிலே\
ஆறிரண்டு நாளிருந்து ஆடிவந்தாய் பாடையிலே...\
தின்றுகுடிக் காமலுந்தன் தேகமது சுருண்டதய்யா\
செந்தமிழர் வீதியெங்கும் தீயெழுந்து மூண்டதய்யா

போர்முகத்தில் தேரெடுத்து புலியெனவே நீநடந்தாய்\
புன்னகையில் பூத்தெமது கண்ணெதிரே நீகிடந்தாய்\
பாரதத்துப் பாவிகளின் பசிக்குணவாய் நீவிழுந்தாய்\
பார்த்தவிழி பூத்திருந்தோம் பார்த்திபனே!\
நீ மடிந்தாய்.

அண்ணனுக்கு அருகிருந்து ஆடிநின்ற முல்லையடா\
அந்நியர்க்குப் பேரிடியாய் அவதரித்த பிள்ளையடா\
மன்னவனே! நீயெழுவாய் மாலையிடக்\
காத்திருந்தோம்\
மாலைமலர் வாடமுன்னர் பாடைவரப்\
பார்த்திருந்தோம்

- புதுவை இரத்தினதுரை

## வேலணை கொத்தணி பாடசாலையில் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கொத்தணி பாடசாலைகளைச் சேர்ந்த 812 மாணவர்கள் அண்மையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். 'லயன்ஸ்' கழகத்தின் அனுசரணையுடன் மருத்துவர்கள் மேற்கொண்ட இச் சோதனையில் மேற்படி மாணவ மாணவியரில் 77 பேர் பல் சம்பந்தப்பட்ட வியாதிகளினாலும், 59 பேர் கண்பார்வைக் குறைவினாலும் பாதிக்கப்பட்டிருப்பதுடன் 194 பேர் அவர்கள் இருக்கவேண்டிய நிறைக்கு குறைவான நிறையுடன் இருப்பதாக அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக யாழ். போதனா வைத்தியசாலையுடனும் வேறு வைத்திய அதிகாரிகளுடனும் தொடர்பு கொள்ளவுள்ளதாக வேலணைக்கொத்தணி அதிபர் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். (22)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மாணவர் வரவு வீழ்ச்சி

### - கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தகவல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சனத்தொகை அதிகரிப்பு காணப்படுகின்ற போதிலும் கூட கல்வி கற்கும்மாணவர்களின்தொகைவீழ்ச்சி அடைந்து வருவதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் கூறியுள்ளன.

1990 ம் ஆண்டில் பன்னிரண்டாயிரத்து நூற்றி எழுபத்தொன்பது மாணவர்கள் கல்வி கற்றனராயினும் இப்போது 18686 மாணவர்களே கல்வி கற்கின்றனர். குழுத் தொகை சமூகப் பண்புக் கூறு ஆய்வுகளின் படி இலங்கையின் ஏனைய மாவட்டங்களை விட மிகக் குறைவானோரே இங்கு எழுத்தறிவு மற்றும் கல்வியறிவு பெற்றவர்களாக இருக்கின்றனர் எனத் தெரிய வருகிறது. இங்கு 61 வீதத்துக்கும் குறைவானவர்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அ. அட்டைவிண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டன

தீர்வை அவர் காண முற்படவில்லை. மாறாக பொலிஸ் தர்பார் நடத்தவே முற்பட்டார்.

மேலும், தற்பொழுது தனக்கொரு சந்தர்ப்பம் வழங்குமாறு சிறிமாவோ கோரினும், பிரச்னைக்கான தீர்வு எதையும் அவர் இதுவரை வெளியிடவில்லை. தேசிய இனப்பிரச்சினை ஒன்றிற்கு இராணுவத் தீர்வு சாத்தியப்படப் போவதில்லை என்பது சிறிமாவோ பண்டாரநாயக்கா சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதல்ல. இது பொதுவாகவே உலகம் தந்த படிப்பினை ஆகும்.

இந் நிலையில் இனப்பிரச்சினை தீர்வு காணப்படவேண்டுமானால் சிறிமாவோபண்டாரநாயக்கா தமது கட்சியின் தீர்வுத் திட்டத்தை வெளியிட வேண்டும். கடந்த இரண்டு வருடங்களுக்குமேலாக செயற்படும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கூட சுதந்திரக் கட்சி தீர்வுத் திட்டம் எதையும் முன்வைத்ததாக இல்லை.

ஆனால், இராணுவத் தீர்வு சாத்தியமாகாது, இதேவேளை தமிழருக்கு ஓர் அங்குல மண்ணும் விட்டுக்கொடுக்கப்பட மாட்டாது என்ற அறிவிப்புடன் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் இனப்பிரச்சினைக்கு சமாதானம் பேசிவிட முடியாது என்று திடமாகக் கூறலாம். இது சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்தகால தனது இனவாதப் போக்கில் இருந்து விடுபடவில்லை என்பதைக் காட்டுவதோடு, அவரிடமும் இனப்பிரச்சினை தீர்வு குறித்து திட்டவட்டமான முடிவு எதுவும் இல்லை என்பதையும், அவர் குழம்பிப் போயுள்ளார் என்பதையுமே காட்டுவதாகவும் உள்ளது.

இந் நிலையில் சிறிமாவோ இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கெனக் கோரும் சந்தர்ப்பம் அவர் மீண்டும் ஒரு தடவை ஆட்சியில் அமர்வதற்கெனக் கோரும் ஒரு சந்தர்ப்பமே ஆகும். அவ்வாறு இல்லை, இனப்பிரச்சினையை தீர்ப்பதே எனது முதல் பணி என சிறிமாவோ கூறுவாரானால், முதலில், தமிழரின் நியாய பூர்வமான கோரிக்கைகளை அவர் அங்கீகரிக்க வேண்டும். பின்னர் அவற்றிற்கான தமது தீர்வை முன்மொழிய வேண்டும். அதை நிறைவேற்று[ம் ஆ]ரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால், தனது கட்சியையே சரியாக வழிநடத்த முடியாமல் தள்ளாடும் சிறிமாவோ, இலங்கை அரசியலில் புரையோடிப் போன புண்ணிற்கு தீர்வைக் காண்பதென்பது சூரியனை தொடும் முயற்சியாகவே இருக்கும்.

---

போது சமூகமளிக்கத் தவறிய ஒருவருக்கு நீதிவான்கள் அபராதம் விதித்தனர்

மதுபோதையில் ஒருவருடன்

---

## தியாகி

பாடுகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றைய உச்சக்கட்ட அஞ்சலி நிகழ்ச்சியின்போது தேர் பவனிகள், ஊர்திப் பவனிகள், பறவைக் காவடிகள் ஆகியவை முக்கிய இடம் வகித்தன.

இவற்றைவிட வழமையான வட்டப்பிரிவு ரீதியான சிரமதான நிகழ்வுகளும், அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

யாழ். சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் தேர் பவனியும், பறவைக் காவடியும் நேற்று யாழ். நகரில் பவனி வந்தன. அத்துடன் வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் ஊர்திபவனியும் இடம்பெற்றது. இறுதியில் இவை நல்லூர் வடக்கு வீதியை வந்தடைந்தன.

பருத்தித்துறையில் தியாகி திலீபனின் ஊர்திச் சுற்றுலாவும் காவடி ஆட்டங்களும் இடம்பெற்றன. பருத்தித்துறை கிராமக்கோட்டுச் சந்தியிலிருந்து ஆரம்பமான தியாகி திலீபனின் ஊர்திச் சுற்றுலாவும் காவடி ஆட்டங்களும் முதலாம் கட்டைச் சந்தி, வி. மு. வீதிச் சந்தி, கல்லூரி வீதிச் சந்தி, நாவலடிச் சந்தியூடாகச் சென்று பருத்தித்துறை வட்டப் பகுதிக்கான தியாகி திலீபனின் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தை அடைந்தது.

வடமராட்சியில் தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவுநாளையடுத்து உண்ணாவிரதங்கள், சிரமதானங்கள், கலை நிகழ்ச்சிகள் நாளுக்குநாள் அதிகரித்த

வண்ணமுள்ளன.

நேற்று எழுவைதீவு அத்துறு சிற்றூர் மக்கள் அத்துலு அம்மன் ஆலய முன்றலில் அடையாள உண்ணாவிரதமிருந்தனர்.

இன்று மண்டான் உப்பளத்தைச் சேர்ந்தவர்கள் மண்டானிலும், கம்பர்மலை சிற்றூர் மக்கள் கம்பர்மலை பாரதி சனசமூக நிலையத்திலும், கரணவாய் சிற்றூர் மக்கள் கரணவாய் அண்ணா சிலையடியிலும் அடையாள உண்ணாவிரதமிருக்கவுள்ளனர்.

பருத்தித்துறை முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் முனையில் உள்ள தொம்மை அப்பர் ஆலய வீதி, சந்தை கடற்கரை வீதி ஆகியவற்றை சிரமதானம் மூலம் இன்று துப்புரவு செய்யவுள்ளனர்.

வடமராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மட்டத்தில் நேற்று திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவாக கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பருத்தித்துறை சித்திவிநாயகர் ஹாட்லிக் கல்லூரி மற்றும் கல்லூரிகளிலும் இந் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

அத்துடன் சித்தன்கேணி மாணவர் கல்வி வளர்ச்சிக் கழகத்தினர் இன்றைய தினம் எழுச்சி விழா ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளனர்.

மேலும் பிரான்பற்று ஞானவைரவர் ஆலய முன்றலில் இன்று அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது.

அத்துடன் கடற்புலிகளின் மகளிர் பிரிவினரின் ஏற்பாட்டில் நேற்று பூம்புகார்கிராமத்தில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

(யோ) (க) (சி) (90) (25) 86)

[41]

---

த்து தீர்ப்பளித்தனர். இவ்வழக்கு தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. (86)

---

ந்த விலையில்விநியோகிக்கப்படவுள்ளன. அதோடு பீற்றூட், கரட் வீட்டுத்தோட்டத்திற்குரிய விதை வகைகளுடன் நாட்டு, வெளிநாட்டு கோவா விதைகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

முற்பணம் கட்டிய விவசாயிகளுக்கு இவை முதல் கட்டமாக விநியோகிக்கப்படவுள்ளனவென மறவல சேவை நிலைய அட்டாரிகள் தெரிவித்துள்ளன. [41]

---

## கொழும்பு

மூவரைப் பொலிசார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடர்புகள் உள்ளனவா என்பதுபற்றி தற்போது பொலிசார் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

---

## கொலரா

பரவலில் யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் ஓட்டி வருகின்றனர். அத்துடன் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தில் வரும் 29ஆம் திகதி பி.ப. 4-00 மணியளவில் கொலரா நோய் தடுப்பு தொடர்பாக யாழ். மாநகர சபை பதில் சுகாதார அதிபர் திரு. க. மயில்வாகனம் தலைமையில் சுகாதாரக் கருத்தரங்கொன்றும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது (சி). (17)

---

## அதிரடிப்படையினர்

காட்டுப்பகுதிக்குள் புகுந்த விசேட அதிரடிப் படையினர் தொடர்ச்சியான தேடுதலில் ஈடுபட்டபின் அதில் ஒரு பகுதியினர் கடந்த 15-ம் திகதி நண்பகல் அளவில் அங்கிருந்து பின்வாங்கி தமது முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோதே அக் காட்டுப் பகுதியில் வைத்து புலிகள் இவை மோர் தாக்குதலை நடாத்தியதாகத் தெரியவருகிறது.

---

அடையாள அட்டை... திணைக்களத்திற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் பல நூற்றுக் கணக்கான விண்ணப்பங்கள் திரும்பி வந்துள்ளன.

கடந்த ஆடி மாதம் முதல் அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியும் இணைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது, ஆனால் ஆடி மாதத்துக்கு முன்னர் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களுடனும் பிறப்புப் பதிவு அத்தாட்சிப் பத்திரப் பிரதி இணைக்கப்பட வேண்டும் என்று தற்போது தெரிவிக்கப்பட்டு அதன் காரணமாகவே பல விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் பல நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் திரும்பி வந்து சேர்ந்துள்ளதாக தெரிய வருகிறது. [41]

# தனியார் விடுதியிலிருந்த தமிழ் வாலிபர் கைது

(கொழும்பு)

தனியார் விடுதியில் தங்கியிருந்த வடபகுதி இளைஞர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு மூன்றாம்மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த யூலை மாதம் செட்டித்தெரு ஈஸ்வரன் விடுதியில் யாழ் வீதியைச் சேர்ந்த கந்தையா யோகராசா என்பவர் தங்கியிருந்தபோது புலனாய்வு பிரிவினர் தொலைபேசிமூலம் இவருடன் தொடர்புகொண்டு விசாரித்தபின் விடுதிக்குச் சென்று இவரைக் கைதுசெய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது விடுதலை தொடர்பாக 5000 ரூபாவை இவரது மனைவியிடம் இருந்து பொலிசார் பெற்றுக்கொண்டபோதிலும் விசாரணை முடிந்தபின்னரே விடுவிக்கப்படுவாரெனக் கூறினராம்.

இதேவேளை கந்தப்புயோகராசா எனும் நபரையும் புலனாய்வு பிரிவினர் தேடிவருவதாகவும் தெரியவந்துள்ளது.

---

### விபத்து

[தென்மராட்சி]

ஓடிக்கொண்டிருந்த சிற்றூர்தியின் சக்கரமொன்று திடீரெனக் கழன்று போனதால் ஏற்பட்ட விபத்தில் அதில் பயணம் செய்த நான்கு மாணவர்கள் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை பளைச் சந்தியில் இருந்து சற்றுத் தொலைவில் ஆனைவிழுந்தான் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த சி. குகராசா சாவகச்சேரி மருத்துவமனையிலும், ஜி. தவேந்திரன், பாஸ்கரன், வசந்தராசா ஆகிய மூவரும் பளை மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (86)

---

நாடு செழிக்க

நன்னீர் பேணுவோம்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை பரதன்

(கந்தசாமி உதயசங்கர்)

தாயின் மடியில்: 01-12-1972

தமிழீழ மண்ணில்: 25-09-1990

மூன்று ஆண்டு சென்றதடா பரதா!
இன்றும் முழு நிலவாய் உன் நினைவு
மாவீரன் ஆனாய் நீ மீட்சிகொள் தமிழருக்காய்
தமிழ்ஈழம் பிறந்துவிடும் மீட்சிகொள்வர்
தமிழ் மக்கள்.

25-09-90 அன்று பாவற்குளம் 2-ம் படிவத்தில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் இவருடன் வீரச்சாவடைந்த போராளிகள் கோபிநாத், தவக்குமாருக்கும் எமது அஞ்சலிகள்.

சேமமடுக்குளம், ஓமந்தை. அம்மா, அப்பா, தம்பி, தங்கை [6077]

## 1-ம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு

4. 10. 1973



# 13 மனித எலும்புக்கூடுகள் பொதுமக்களின் பார்வைக்கு

## இராணுவத்தினரால் வைக்கப்பட்டுள்ளன

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டம் கித்துள், கிடாரம் போட்ட மடு பகுதியில் 13 மனித எலும்புக் கூடுகள் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற இரு பொது மக்களைக் கைது செய்த சிறிலங்கா இராணுவத்தினர் இந்த 13 எலும்புக் கூடுகளையும் அவர்களுக்கு காண்பித்ததுடன் இப்பகுதிக்கு வந்தால் உங்களுக்கும் இதே கதிதான் எனக் கூறி எச்சரித்த பின் அவர்களை திருப்பி அனுப்பியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க கடந்த பங்குனி மாதம் நவுண்டலியமடு எனும் இடத்தில் நெல் அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த 13 விவசாயிகள் சிறிலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 13 விவசாயிகள் தொடர்பாக உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் முறையிட்டபோதும் இன்றுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ் எலும்புக் கூடுகள் மேற்படி விவசாயிகளுடையதாக இருக்கலாம் என பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## நொச்சிமோட்டையில் பயணி ஒருவர் மரணம்

வவுனியா மாநகர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நோய் முற்றிய நிலையில் வைத்தியர்களால் விடுசெல்ல அனுமதிக்கப்பட்ட பெண்மணி ஒருவர் நொச்சிமோட்டை பகுதியில் மரணமானார்.

இவ்வாறு மரணமானவர் ஆவரங்கால் முரளி வீதியைச் சேர்ந்த பா. யோகேஸ்வரி (வயது 59) எனத் தெரிய வந்துள்ளது. இவர் பலகாலமாக மேற்படி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த போதிலும் நோய்குணமாகாது கடுமையாகியபோதே வைத்தியர்கள் வீட்டுக்கு கொண்டு செல்லும்படி அறிவுறுத்தினராம்.

இதனால் உறவினர்கள் யாழ்ப்பாணம் அழைத்துவரும் வழியில் இராணுவ கட்டுப்பாட்டிற்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கும் இடைப்பட்ட நொச்சிமோட்டை பகுதியில் நீர் அருந்தும் போது மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பு கிராமங்கள் படையினரால்சுற்றிவளைப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் கிராமம் ஒன்றை கடந்த 20ஆம் திகதி திடீரென சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ தேசத்துரோகிகளும் இளைஞர்களைக் கைதுசெய்து பலமாகத் தாக்கியபின் விடுவித்தனர்.

மட்டக்களப்பு அம்பிளாந்துறை அம்பலத்தடி, பழுகாமம் ஆகிய இரு சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்தும் வெளியேறிய இராணுவத்தினரும், ரெலோ துரோகிகளுமே களுவந்தன்வெளி கிராமத்தை அதிகாலை 5.30 மணியளவில் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். இவர்கள் அப்பகுதியில் வசித்த பல அப்பாவி இளைஞர்களைக் கைதுசெய்து அப்பகுதி பாடசாலை ஒன்றிற்குக் கொண்டு சென்று அங்கு வைத்தே பலமாகத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

## மரம்வெட்டச் சென்ற இருவர் இராணுவத்தால் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு சின்ன வத்தைப் பகுதியில் மரம்வெட்டச் சென்ற இருபொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யபபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆ. சங்கரப்பிள்ளை (வயது51) எனத் தெரியவந்துள்ளது மற்றவர் பற்றிய பெயர் விபரம் கிடைக்கவில்லை.

## தோட்டத்திற்கு சென்றவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

மர்மமான முறையில் மரணமடைந்த ஒருவரின் சடலம் நேற்று தமிழீழ காவல்துறையினரால் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த கா. சுப்பிரமணியம் [42] என்பவருடைய சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர் நேற்று முன்தினம் [illegible] திரும்பாமையினால் உறவினர்கள் இவரைத் தேடிச் சென்றபோது இவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (நி)

## திலீபன் நினைவு அஞ்சலி நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம்ஆண்டு நிறைவையொட்டி இன்று மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

இன்று பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற இருக்கும் இந்த நிகழ்வில் பல பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்துவர், அத்துடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன,

## மணலாற்று பகுதியில் திலீபன் நினைவு நிகழ்வுகள்

(மணலாறு)

மணலாற்றில் தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு [illegible] டிக்கப்படுவதுடன் அடையாள உண்ணா விரதங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [illegible]

## லெப். நிரேஷிற்கு மக்கள் இறுதி அஞ்சலி

(தென்மராட்சி)

யாழ்.மாவட்டத்தில் நேற்று முன்தினம் விபத்து ஒன்றில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன்ட் நிரேஷ் (குலவீரசிங்கம் தேவபாலன், மீசாலை கிழக்கு மீசாலை) எனும் போராளியின் புகழுடல் நேற்று பிற்பகல் 3-15 மணியளவில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு அங்கிருந்து பின்னர் மீசாலை வயல்கரை விங்கேஸ் படிப்பகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இம் மாவீரருடைய புகழுடலுக்கு பொதுமக்கள், மாணவ மாணவிகள் பலரும் தமது இறுதி அஞ்சலியை மலர்தூவி செலுத்தினர், பின்னர் தென்மராட்சி கோட்ட அரசியல் துறையைச் சேர்ந்த திரு. விபுலன் தலைமையில் இடம் பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி தேன்மொழி, தென்மராட்சி கோட்ட அரசியல் துறையைச் சேர்ந்த பொற்கோவன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இந்நிகழ்வின் பின்னர் இம் மாவீரருடைய புகழுடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் மீசாலை மயூரன் வீதியூடாக பிரதான வீதியை வந்து பின்னர் பிரதான வழியாக கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு விதைக்கப்பட்டது. இம்மாவீரருடைய புகழுடல் இராணுவ மரியாதையுடனும், பாண்ட் வாத்தியத்துடனும் வீதிகளில் பவனிவர மக்கள் இரு மருங்கிலும் நின்று மலர்களைத் தூவி அஞ்சலியைச் செலுத்தினர். (86

கர்நாடக மாநிலத்தில்

## துணை முதல்வர் உட்பட 6 அமைச்சர்கள் ராஜினாமா

(சென்னை)

கர்நாடக மாநில துணை முதல்வர் உட்பட ஆறு அமைச்சர்கள் பதவி விலகுவதாக அறிவித்துள்ளனர்.

கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லியின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தாம் பதவி விலகுவதாக மாநிலத்துணை முதல்வர் எஸ். எம். கிருஷ்ணா உட்பட ஆறு அமைச்சர்கள் கட்சித் தலைவர் பி. வி. நரசிம்மராவ் அவர்களுக்கு தூதுவர் மூலமாக எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பெங்களூரில் நிருபர்களிடம் பேசிய வருவாய்த்துறை அமைச்சர் ராஜசேகர மூர்த்தி மேலும் கூறுகையில் முதல்வர் வீரப்ப மொய்லியின் தலைமையில் நம்பிக்கை இழந்து போய் விட்டதாகவும் தெரிவித்தார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 24 09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11041

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9753, 42-0849, 26-1724, 41-4194, 26-0495, 27-6063, 26-6941, 24-5418, 42-5603, 26 1461, 28-8367, 24-1983, 24-3063, 26-7663, 42-3726, 26-4648, 24-8429, 26-1941, 22-6073, 27-4628, 28-3029.


வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-5599, 26-0535, 28-3004, 26-6505, 24-5119, 22-4766, 27-3903,

MODERN

வீரச்சாவு

25. 09. 1992



## லெப். தமிழேஸ்வரன்

(கார்த்திகேசு யோகேஸ்வரன்)

பொருள் பொதிந்த யுத்தமொன்று நீ நடத்தினாய்
இதழ் விரிந்த வாசமுல்லைப் பூ உதிர்ந்ததோ
பூ விரித்த பூமிதன்னில் தேன் சொரிந்தவா
யோகா என்று அலறவைத்து உயிர் பிரிந்தவா
யுத்தம் வந்த போது எல்லாம் ரத்தம் வாங்கினாய்
நித்தம் எங்கும் நின்று சுற்றி வனமும் ஆடினாய்
உந்தன் துக்கம் எங்கள் நெஞ்சில் ரத்தம் சொட்டுது
ரத்தம் சொட்டும் துக்கம் நீளவானை முட்டுது.
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

லெப். தமிழேஸ்வரன் பாலர் பாடசாலை
ஆசிரியை, மாணவர்கள்.

தல்லையப்புலம்,
கரவெட்டி.

[5852]

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

## சின்னத்தம்பி பரமேஸ்வரன்

[சிரேஷ்ட மொழிபெயர்ப்பாளர், தே சே வங்கி]

எமது விக்னேஸ்வராவின் ப.மா. சங்க கொழும்புக் கிளை செயலாளராகவிருந்து அர்ப்பணிப்புடன் கலந்த சேவையாற்றிக் கொண்டிருந்தவேளை அமரரின் திடீர் மறைவு தந்த அதிர்ச்சியின் எல்லையில் எமது கண்ணீர் அஞ்சலிகளை ஆத்ம சாந்திக்காக சமர்ப்பிக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,

[6095] யா/விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி.

ளது. இவர் நேற்று முன்தினம் தோட்டத்திற்கு புல் பிடுங்கச் சென்றவரென்றும் இரவு வீடு

னின் ஆறாம் ஆண்டு நினைவு தினம் பொது மக்களால் மிகவும் எழுச்சி பூர்வமாக அனுஷ்

## கிழக்கு மாகாணத்தில் புதிய இராணுவமுகாம்

(நமது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் புதிய இராணுவமுகாம் ஒன்றை அமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கித்துள், ஆயித்தியமலை, கரடியனாறு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவமுகாம்களுக்கு நடுவிலேயே இப்புதிய முகாமை கடந்த 17-ம் திகதி இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

## மட்டக்களப்பில் இடம் பெயர்ந்தோர் விபரங்கள் சேகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து வாழ்பவர்களின் விபரம் திரட்டப்பட்டு தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஆறு நலன்புரி நிலையங்கள் செயற்படுவதாகவும், இவற்றில் 536 குடும்பங்களை சேர்ந்த 2246 அங்கத்தவர் தங்கியுள்ளனர்.

இவர்களை விட 12249 குடும்பங்களைச் சேர்ந்த 58543 அங்கத்தவர்கள் தமது இடங்களை விட்டு வெளியேறி உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கி வாழ்கின்றனர்.

## இராணிப்பேட்டைத் தொகுதி அ.இ.அ.தி மு.க. முன்னணி

(சென்னை)

இராணிப்பேட்டை சட்டப் பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில் ஆளும் அ.தி.மு.க. வேட்பாளர் முன்னணியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது வாக்குகள் எண்ணப்பட்டுவரும் நிலையில் பல சுற்றுகள் எண்ணப்பட்ட நிலையில் அ.தி.மு.க. வேட்பாளர் மோகனன் தமக்கு அடுத்தபடியாக உள்ள தி.மு.க. வேட்பாளர் ஆற்காடு வீராசாமியை விட 12,065 வாக்குகள் அதிகம் பெற்றிருக்கிறார்.

அ.தி.மு.க. வேட்பாளர் 56 887 வாக்குகளும், தி.மு.க. வேட்பாளர் 44,822 வாக்குகளும் பெற்றுள்ளனர். பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் 24,743 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

## டாக்டரிடமிருந்து திருட்டு

யாழ். போதனா மருத்துவமனை டாக்டர் ஒருவர் தனது தெதஸ் கோப்பை காணவில்லையென சம்பந்தப்பட்டவர்களிடம் அறிவித்துள்ளார்.

இது பற்றி தெரியவருவதாவது சம்பந்தப்பட்ட டாக்டர் தனது காரின் பின் பகுதியில் தெதஸ்கோப் வைத்திருந்ததாகவும் இந்த தெதஸ்கோப்பை காணவில்லையென முறையிட்டதாகவும் தெரியவருகின்றது.

...ப்பட்டு வருகின்றன.

தியாகி திலீபன் நினைவாக செம்மலை, அளம்பில், குமுழமுனை, உடுப்புக்குளம் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயங்களில் மக்கள் தினமும் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக அளம்பில் உயர்தர வித்தியாலய மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் கடந்த 23ஆம் திகதி அடையாள உண்ணாவிரதம் இருந்தனர். இதேவேளை தியாகி திலீபன் நினைவாக முள்ளை கலைஞர்களாலும் கலை பண்பாட்டுக் கழகத்தினராலும் ஒழுங்கு செய்யப்பட்ட "அரக்கர்களின் அவலங்கள்" எனும் தெருக்கூத்து மணலாறில் கிராமம் தோறும் நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பொதுக்குழு கூட்டம்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்த பொதுக்குழு அங்கத்தவர்களுக்கான கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு தமிழீழக் கல்விக்கழக அலுவலகத்தில் நடைபெறுமென பேரவைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யூனிசெப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உதவி சித்த வைத்தியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு அடுத்த மாதம் 16ஆம் 17ஆம் திகதிகளில் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கு 8 15 மணி தொடக்கம் 4. 15 மணிவரை நடைபெறவுள்ளது.

## MODERN EDUCATION CENTRE

Nelliady - Karaveddy.

### A/L 94 DAY CLASS

கலை வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 25. 09. 93 காலை 9 00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. M. லோகசிங்கம் |
| கணக்கியல் | — | திரு. S. பவான் |
| வர்த்தகம் | — | திரு. T. வரதன் |
| அளவையியல் | — | திரு. A விக்கி |
| இந்து நாகரிகம் | — | திரு. ஜெ தீஸ்வரன் |
| தமிழ் | — | திரு. நடா |

[5853]

## தவறவிடப்பட்டது

கோண்டாவில் கிழக்குக்கும் - ஆலடி ஒழுங்கைக்கும் இடையில் 7-8 மணியளவில் பாக், பேசுடன் மூக்குக் கண்ணாடி, மிக முக்கிய கணக்குப்பதிவுக் கொப்பிகள் தவறவிடப்பட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

எம். அருளானந்தம்
அருள் ஆச்சிரமம்
மருதனார்மடம்

(6093)

## மரண அறிவித்தல்

### திரு. கார்த்திகேசு கந்தையா

மட்டுவில் தெற்கு சந்திரபுரத்தைச் சேர்ந்த திரு. கார்த்திகேசு கந்தையா அவர்கள் 22-09-93 அன்று காலமாகிவிட்டார். இவரது இறுதிக் கிரியைகள் 23.09 93 வியாழக்கிழமை 3.00 மணிக்கு நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி க. திரவியமும், பிள்ளைகளும்

(6093)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது